கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஒருங்கிணைப்பில் சூலூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சிபி.செந்தில்குமார், சூலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பரசு, மோப்பிரிபாளையம் பேரூர் கழக செயலாளர் சசிக்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் சூலூர் வடக்கு ஒன்றிய பாஜக பொருளாளர் சதீஷ்குமார், தேமுதிக மாவட்ட மகளிரணி பிரேமலதா மற்றும் அதிமுக, டி.வி.கே கட்சிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், செட்டிப்பாளையம் அப்துல் ரகீம், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் நேற்று (25.07.2025) நடைபெற்ற 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தமிழ்நாடு வணிகர் நலவாரியம் சார்பில் மறைந்த வணிகர்களின் குடும்பத்தினர் மூன்று நபர்களுக்கு ரூ.3,00,000 க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், வணிகவரித் துறை ஆணையர் எஸ். நாகராஜன், இணைஆணையர் (நிர்வாகம்) திருமதி மொ.நா. பூங்கொடி, நலவாரிய முதன்மைச்செயல்அலுவலர் / கூடுதல் ஆணையர் அ.பா.தேவேந்திரபூபதி மற்றும் வணிகவரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அ.தி.மு.க. பா.ம.க.தே.மு.தி.க. அ.ம.மு.க. வைச் சேர்ந்த 290 பேர் அக்கட்சிகளை விட்டு விலகி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர். இரா. இராஜேந்திரன் முன்னிலையில். தி.மு.க. வில் இணைந்தனர். அவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர். கைத்தறி ஆடை அணிவித்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர். மு.கார்த்திகேயன் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளர்கள். ஒ எம்.ரமேஷ் (கிழக்கு) ஏ.சி.எம். செல்வகுமரன் (தெற்கு). மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர். ராம்பிரகாஷ் ஆகியோர் இருந்தனர்.

புதிதாக பணி நியமனம் பெறும் –

இடைநிலை ஆசிரியர்கள் பணியினை கவனமாக மேற்கொள்ள வேண்டும்!

அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஜூலை 26- நேற்று முன்தினம் (24.07.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, "திறன்" இயக்கம் மற்றும் "TN SPARK" பாடத்திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் விழாவிற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்பேசியதாவது:

ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கும் விழாவில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் எனது வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியினைதமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் படித்தார்.

விழாவில் அவர் பேசிய தாவது:-

இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய நீங்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் சமுதாய விதைகளாக தமிழ் நிலத்தில் தூவப்படவிருக்கிறீர்கள். விதைகளாக தூவப்படும் நீங்கள் பல இலட்சம் மாணவச் செல்வங்களை மரங்களாக உருவாக்கும் பணியில் உங்களை ஈடுபடுத்தப் போகிறீர்கள்.பள்ளியில் நீங்கள் அறம் சார்ந்த பாடங்களை நடத்திட வேண்டும். அறிவை மட்டுமே நம்பி நடைபெறும் இந்த திராவிட மாடல் ஆட்சியில் ஆசிரியர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.அன்பையும் பண்பையும் கூட்டி மாணவர்களுக்கு திசைகாட்டிகளாக இருக்கக் கூடியவர்கள் ஆசிரியர்கள்.அறிவு ஆயுதங்களாக விளங்கும் ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் உடல் நலக் குறைவினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் எங்களிடம் பணி நியமன ஆணை வழங்கும் விழா குறித்து கேட்ட பொழுது "நீண்ட இடைவெளிக்கு பிறகு 2457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமனம் வழங்க உள்ளதால் உங்கள் திருக்கரங்களால் வழங்கினால் தான் முறையாக இருக்கும்" எனக் கூறினோம். ஒரு நல்ல மனிதர் இந்த நாட்டை எப்படி ஆளுகிறார் என்பதற்கு உதாரணமாக, "24-ஆம் தேதி பணி நியமனம் என்று ஆசிரியர்களது குடும்பமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.என்னால் அது பொய்த்துப் போய் விடக்கூடாது எனவே, துணை முதல

மை ச்சரை வைத்து விழாவினை நடத்துங்கள்" என முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

பள்ளிக் கல்வித் துறை என்றாலே முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் துள்ளிக் குதித்து வருவார்கள்.அவர்களின் கரங்களை வலு சேர்க்கும் விதமாக உங்கள் பணிகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக் கல்வித் துறையில் "திறன்" என்ற திட்டத்தினையும், "TN SPARK" எனும் பாடத் திட்டத்தினையும் துணை முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். மாணவர்களுக்கு கணினி சார்ந்த அடிப்படை அறிவினை பெறுவதற்காக இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக "TN SPARK" எனும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய நீங்கள் ஆசிரியர் பணியினை மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.ஆசிரியர் சங்கத்தினை சார்ந்தவர்களும் இவ்வாசிரியர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்ந்தாலும் ஆக்கப் பூர்வமான கேள்விகளை எழுப்புங்கள்.எதுவுமே செய்யாதவர்களை பார்த்து "எதுவுமே செய்ய மாட்டீர்களே" என ஒரே ஒரு கேள்வியினை மட்டும் கேட்பார்கள்.பத்து கோரிக்கைகளில் ஏழு கோரிக்கைகளை செய்து முடித்தவர்களைத் தான் எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது செயல்களை ஏன் செய்யவில்லை என அடுக்கடுக்காக கேள்விகளை கேட்கிறார்கள். அதனையும் ஏற்றுக்கொண்டு படிப்படியாக அனைத்து கோரிக்கைகளையும் செய்து முடிக்கவே திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனையில் இருந்து கொண்டே மாவட்ட ஆட்சியர்களிடமும் பயனாளிகளிடமும் காணொலி காட்சியின் மூலம் கலந்துரையாடி ஓய்வு நேரத்திலும் தமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் மக்களுக்காக ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக் கல்வித் துறையின் 2.0 மூலம் 2026-ஆம் ஆண்டில் இன்னும் அதிகமான திட்டங்களை செயல்படுத்தி காட்டுவோம் என உறுதிபடக் கூறி, இன்று புதிதாக பணி நியமனம் பெறும் இடைநிலை ஆசிரியர்களாகிய உங்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேசினார்.

சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அ.தி.மு.க. பா.ம.க.தே.மு.தி.க. அ.ம.மு.க. வைச் சேர்ந்த 290 பேர் அக்கட்சிகளை விட்டு விலகி மாவட்ட கழக செயலாளர், அமைச்சர். இரா. இராஜேந்திரன் முன்னிலையில். தி.மு.க. வில் இணைந்தனர். அவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர். கைத்தறி ஆடை அணிவித்தார். உடன் மாவட்ட கழக பொருளாளர். மு.கார்த்திகேயன் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றிய செயலாளர்கள். ஒ எம்.ரமேஷ் (கிழக்கு) ஏ.சி.எம். செல்வகுமரன் (தெற்கு). மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர். ராம்பிரகாஷ் ஆகியோர் இருந்தனர்.

தமிழ்நாட்டில் சுகாதாரத் துறையில்

3 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

மக்களவையில் – சி.என். அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 26- தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு சுகாதாரத்துறையில் கடந்த 3 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட திட்டங்கள் என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அது வருமாறு:

அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சுகாதாரத் துறை திட்டங்களின் விவரங்கள், இந்தத் திட்டங்களின் நோக்

கங்கள், நோக்கம் மற்றும் தன்மை;

(b) மேற்கூறிய மாநிலத்தில் மேற்கூறிய சுகாதாரத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட செலவு, ஒவ்வொரு திட்டத்தையும் முடிப்பதற்கான திட்டமிடப்பட்ட காலக்கெடு, முக்கிய மைல்கற்கள்;

(c) குறிப்பிட்ட மாநிலத்தில் இந்த சுகாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதில் அல்லது செயல்படுத்துவதில் ஏதேனும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதா, அப்படியானால், அத்தகைய தாமதங்களுக்கான குறிப்பிட்ட காரணங்கள், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், சரியான நேரத்தில் முன்னேற்றத்தை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்த தீர்வு/சரிசெய்தல் நடவடிக்கைகள்; மற்றும்

(d) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்க முன்மொழியப்பட்ட மூலோபாய/செயல்பாட்டு நடவடிக்கைகள் குறித்து விவரிக்கவும்.

இவ்வாறு சி.என். அண்ணாதுரை கேள்விகளை எழுப்பினார்.

கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

அவலூர்பேட்டையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

செஞ்சி ஜூலை 25. மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்துபயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் கடந்த 15 ஆம் தேதிதொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர் பேட்டை ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம்முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் செல்வம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.தொடர்ந்துமுகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.தொடர்ந்து வேளாண்மை திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகளை அவர் வழங்கினார்.

முன்னதாக மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம் அவலூர்பேட்டைஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடியபெட்டகத்தினையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினை அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் வட்டாட்சியர் தனலட்சுமி,முகம் கண்காணிப்பாளரும், உதவி செயற்பொறியாளர் யாசின், ஒன்றிய செயலாளர் சாந்தி சுப்பிரமணி யன்,ஒன்றிய கவுன்சிலர் ஷாக்கின் அர்ஷத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், சீதாலட்சுமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சரோஜா அய்யப்பன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள்,திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து வேளாண்மை துறை சார்பில் விவசாயிக்கு பவர் ஸ்பேர்இயந்திரத்தை வழங்கினார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், வட்டாட்சியர் தனலட்சுமி,ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், சீத்தாலட்சுமி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்டம்,நெய்வேலி நகரப்பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு, புதிய உறுப்பினர் சேர்க்கை பணிநடைபெற்றது. கழக தலைமை செயற்குழு உறுப்பினர் சா.இராச வன்னியன், நெய்வேலி நகர செயலாளரும்,என்.எல்.சிதொ.மு.ச,பொதுச்செயலாளர்வி.குருநாதன்ஆகியோர்மூன்றாவதுவட்டத்தில் உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுப்பட்டனர். வட்டச் செயலாளர் கண்ணன், அவைத்தலைவர் ஜெயக்குமார்,தொ.மு.ச,பகுதி செயலாளர் முரளி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வட்டங்களில் உள்ள வீடுகளுக்கு நேரடியாக சென்று உறுப்பினர் அட்டை புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கை பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில் நெய்வேலி நகர கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், தொமுச நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடியின் 4 ஆண்டு வெளிநாட்டுப் பயணச் செலவு 295 கோடி ரூபாய்!

புள்ளி விவரத் தரவுகள் தகவல்!

புதுடெல்லி, ஜூலை 26- கடந்த 2021ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை, பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு கிட்டத்தட்ட 295 கோடி ரூபாய் செலவாகியுள்ளதாக, பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான மொத்த செலவு புள்ளி விவர தரவுகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், 2025 ஆம் ஆண்டில் மட்டும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் பயணங்களுக்கு 67 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. இதில் பிரான்ஸ் பயணம் மட்டும் 25 கோடி ரூபாயை தாண்டியுள்ளது. நாடு வாரியாகவும் ஆண்டு வாரியாகவும் உள்ள தரவுகளின்படி, நடப்பாண்டு மொரிஷியஸ், சைப்ரஸ், கனடா மற்றும் குரோஷியா மற்றும் கானா, டிரினிடாட் டொபாகோ, அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் நமீபியா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி மேற்கொண்ட பயணங்களுக்கான புள்ளிவிவரங்கள் தரப்படவில்லை.

பிரதமர் மோடியின் 2023 ஆம் ஆண்டு எகிப்து பயணத்திற்காக, விளம்பரம் மற்றும் ஒளிபரப்புக்கான செலவு மட்டும் 11 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், 'ஓரணியில் தமிழ்நாடு' குறித்து விழிப்புணர்வு பிரச்சாம் கடலூர் பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா தலைமையில் தொடங்கப்பட்டது. உடன் தொகுதி பார்வையாளர் சுவை சுரேஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ்.ஆர்.பாலாஜி, மாநகர துணைச்செயலாளர்அகஸ்டின்பிரபாகரன்முன்னிலைவகித்தனர்.உடன்மாநகரநிர்வாகிகள்பங்கேற்றனர்.